முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1515

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.11.2023,** புதன்கிழமை

1. மாதர்ம குரு ராஜனே
மக்களை காக்க வந்த ஆறுமுக அரங்கனே
பூதலம் எல்லாம் உன் புண்ணியபலம்
பெருமைபட எங்கும் பரவி நிற்க
2. நிற்கவே பேருலகம் பாதுகாப்புப் பெறுமென
புகன்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
பூதலத்தில் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 06 ம் நாள், 22.11.2023, புதன்கிழமை)
புகலுவேன் அரங்க ஞானி உந்தனுக்கு
3. உந்தனுக்கு சோபகிருது தேள் திங்கள்
உயர்வாக தொடர்ந்து எடுத்துரைப்பேன்
சிந்தைபட ஆறுமுகன் யான் உன்னுள்
சித்திமிகு சக்தியாக இணைந்து
4. விந்தைபட பல அற்புதம் நடத்த
விரைந்து இன்னும் அரங்கன் உன் சக்தி நோக்கி
நோக்கியே முற்பிறவி தொடர்புள்ள
நிலமதனில் சீமான்களும் ஞானவான்களும்
5. அற்புதம்பட உன்னோடு வந்திணைந்து
ஆற்றல்பட அரங்கன் உன் தர்மத்தை காத்து
அச்சமற சன்மார்க்க நெறி அகிலமெங்கும் தழைக்க வழிவகை செய்து
மெச்சவே அரங்கன் உன் அவதாரம் மேலும் இன்னும் நிலைகள் உயர
6. உயரவே ஆறுமுகன் யான் அற்புதம் நடத்துவேன்
உண்மை பட அரங்கன்
உன்னை ஏற்ற மக்களுக்கு
ஊழது அகலுவதோடு இனிப்பிறவாத

7. நன்மைமிகு பெரும் பேறு இனிதே கண்டு
ஞானிகளாய் ஞான உலகம் படைக்கின்ற
ஞானலோகம் அமைக்கின்ற மகா சக்திகளாய்
ஞாலமதில் வரம் பெறுவர் உன் ஆசி பெற்றோர்
8. ஆசிபெற்ற மக்களுக்கு ஆறுமுகன்
ஆற்றலாக துணைநின்று அருள் புரிவேன்
நேசமுடன் அரங்கனால் இந்த அற்புதம்
நிலவுலகம் கண்டு உயரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–